செ.வெ.எண்: 676 நாள்: 17.10.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு பருவ குறுவை நெல் சாகுபடியில் வரலாறு காணாத நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நெல் கொள்முதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்று(16.10.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதன் தொடர்ச்சியாக இன்று(17.10.2020) ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள கீழ உளூர்,தென்னமநாடு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தையும்,பட்டுக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட கரம்பயம், ஒரத்தநாடு வட்டத்திற்குட்பட்ட பருத்தியப்பர் கோவில் ஆகிய இடங்களில் உள்ள சேமிப்பு கிடங்குகளையும் நேரடி பார்வையிட்டு ஆய்வு செய்தார். . கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் 01.10.2020 முதல் 15.10.2020 வரையிலான காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 268 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இதுநாள் வரையில் 70 ஆயிரத்து 189 மெட்ரிக் டன் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேவையான இடங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கையும்,மேற்கொள்ளப்பட்டு வருகிறது.கடந்த 35 வருடங்களில் இல்லாத அளவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது இதன் மூலமாக 14 ஆயிரத்து 467 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளார்கள். இவ் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மின்னனு பணபரிவர்த்தனை முறையில் ரூபாய் 136 கோடி பணம் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 7 ஆயிரம் மெட்ரிக் டன் வரை நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை போர்க்கால நடவடிக்கை மூலமாக தேக்கம் அடையாமல் தினசரி 500 லாரிகள் மூலமாக சேமிப்பு மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது, என தெரிவித்து நெல் கொள்முதல் நிலையம் மற்றும் சேமிப்பு கிடங்குகளையும் ஆய்வு செய்யப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்திற்குட்பட்ட கீழ உளூர் தென்னமநாடு ஆகிய இடங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து,நெல் கொள்முதல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள்,ஆவணங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தும், விவசாயிகளிடம் கோரிக்கைகளையும் கேட்டறிந்து,மேலும் விவசாயிகளிடமிருந்து நெல்களை உடனடியாக கொள்முதல் செய்திட வேண்டும்,கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனுக்குடன் சேமிப்பு கிடங்கிற்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டு,கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை சேமிப்பு கிடங்கிற்கு எடுத்து சென்ற பின்புதான் அடுத்த ஆய்விற்கு சென்றார்.

தொடர்ந்து பட்டுக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட கரம்பயம் ஒரத்தநாடு வட்டத்திற்குட்பட்ட பருத்தியப்பர் கோவில் ஆகிய இடங்களில் உள்ள சேமிப்பு கிடங்கு களையும் நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்து நெல் மூட்டை தூக்கும் சுமை தொழிலாளர்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து, நெல் மூட்டைகள் தேக்கம் ஏற்படாமல் இருந்திட பணி செய்து முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தி,தொழிலாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்

தொடர்ந்து பட்டுக்கோட்டை வட்டம் திட்டக்குடி கிராமத்தில் 7.65 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் நவீன சேமிப்புக் கிடங்கு பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகள் அனைத்தும் தரமாகவும்,விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் மற்றும் ஆய்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர்(பொ) திரு.சிற்றரசு, மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.